**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு மா.சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் புரட்டாசி திங்கள் 21-ம் நாள்

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 07-ம் நாள் செவ்வாய்க்கிழமை

******

**இடைமனு விண்ணப்ப எண். 6/2021-ல்**

**நிறைவேற்று மனு எண். 25/2019-ல்**

**அசல் வழக்கு எண். 173/2013**

1.ராஜேந்திரன்
2.சுப்பராயன்
3.அஞ்சம்மாள்
4. வி.சுப்பராயன்
5. தேவேந்திரன்
6. செல்வராஜ்
7. கிருஷ்ணன்
8. லோகநாதன் (வழக்குக்கு பிறகு இறந்தார்)
9. தயாநிதி
10. விஜயகுமார்
11. வனஜா
12. கலியபெருமாள்
13. நேரு
14. தனுஷ்சு
15.கல்கி
16. ரிஸ்ஷி
17. மைனர் பாலாஜி அவரது தாயாரும்
பாதுகாவலருமான 14-ம் எதிர்வாதி
தனுஷ்சு மூலமாக

..... மனுதாரர்கள்/ எதிர்மனுதாரர்கள்/எதிர்வாதிகள்

**...எதிர்...**

லெனின் ... எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 26.09.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு A.ராம்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.07 12:32:45 +0530

வழக்கறிஞர் திரு. S.சுந்தரய்யா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

இம்மனுவில் ஏற்பட்டுள்ள காலதாமத நாட்களான 705 நாட்களை மன்னித்து உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை–21 விதி 106(3) மற்றும் பிரிவு 151–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

**(1.1)** மனுதாரர்கள் மீது எதிர்மனுதாரர் நிறைவேற்று மனு தாக்கல் செய்து அந்நிறைவேற்று மனுவில் எதிர்உரை தாக்கல் செய்ய கெடு போடப்பட்டு, போதிய சட்ட ஆலோசனையானது மனுதாரர்களுக்கு கிடைக்காததால், கடந்த 10–12–2019 அன்று எதிர்உரை தாக்கல் செய்யாமல் மனுதாரர்கள் அனைவரும் தோன்றா தரப்பினர்களாக்கப்பட்டு மனுதாரர்களுக்கு எதிராக கடந்த 10–12–2019 அன்று ஒருதலைபட்ச உத்தரவானது பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்து, இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் நிறைவேற்று மனுவிற்கான எதிர் உரையினை ஏற்றுக்கொண்டு வழக்கை மேல்நடத்த வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது.

**(1.2)** மேலும் கடந்த 10–12–2019 அன்று மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவானது பிறப்பிக்கப்பட்டுள்ள விபரமும் கடந்த 14–12–2021 அன்று தான் சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் மூலம் மனுதாரர்களுக்கு தெரியவந்தது. இம்மனுவினை கடந்த 10–12–2019–லிருந்து 30 நாட்களான 09–01–2020 க்குள் தாக்கல் செய்து இருக்க வேண்டும். ஆனால் இந்நிறைவேற்று மனு குறித்த விபரமானது கடந்த 14–12–2021 அன்று தான் மனுதாரர்களுக்கு தெரியவந்தது. போதிய சட்ட ஆலோசனை கிடைக்காததால்

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.07 12:32:55 +0530

குறிப்பிட்ட கால கெடுவிற்குள் இம்மனுவினை தாக்கல் செய்ய இயலவில்லை. எனவே இம்மனுவில் ஏற்பட்டுள்ள காலதாமத நாட்களான 705 நாட்களை மன்னித்து உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**2. எதிர்மனுதாரர்/ வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்**

**(2.1)** மனுதாரர்கள் எக்ஸ்பார்டி உத்தரவை ரத்து செய்ய 705 நாட்கள் காலதாமதமாக மனு தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர்கள் கால தாமதமான ஒவ்வொரு நாட்களுக்கும் சரியான, ஏற்றுக் கொள்ள கூடிய காரணம் அபிடவிட்டில் கூறவில்லை. நிறைவேற்று மனுவில் மொத்தம் 16 எதிர்மனுதாரர்கள் உள்ளனர். இவர்களில் யாராவது ஒருவர்கூட வழக்கில் ஆஜராகி நடத்தியிருக்கலாம். இந்த நிறைவேற்று மனுவில் ஒருதலைபட்ச உத்தரவு தீடீரென்று ஏற்படவில்லை. மனுதாரர்களுக்கு பலமுறை வாய்ப்பு வழங்கப்பட்டு அதன் பின்னரே உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் எக்ஸ்பார்டி ஆன தேதி அபிடவிட்டிலும் மனுவிலும் தவறாக கூறப்பட்டுள்ளது.

**(2.2)** மனுதாரர்களுக்காக வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தார். போதிய சட்ட ஆலோசனை கிடைக்கவில்லை என்ற கூற்று பொய்யானது. நிறைவேற்று மனுவில் ஏற்பட்ட உத்தரவு விபரம் 14-12-2021 அன்று தான் மனுதாரர்களுக்கு தெரியவந்தது என்பது அப்பட்டமான கட்டுக்கதை தவிர வேறில்லை. மனுதாரர்கள் எதிர்மனுதாரரின் சொத்துக்களை அபகரித்து வைத்திருப்பதோடு 2013 ஆம் ஆண்டு தொடர்ந்த வழக்கை ஒவ்வொரு காலகட்டத்திலும் மனுதாரர்கள் பல்வேறு வழிகளில் இழுத்தடித்து வருகிறார்கள்.

**(2.3)** மனுதாரர்கள் அவ்வப்போது தங்கள் வழக்கறிஞர்களை மாற்றிக் கொண்டு வருகிறார்கள். தற்போது நான்காவது வழக்கறிஞரை நியமனம் செய்துள்ளனர். மனுதாரர்களுக்கு தற்போது தான் இந்த மனுவை தாக்கல் செய்ய சட்ட ஆலோசனை கிடைத்ததாக கூறுவது முற்றிலும் பொய். 705 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க எந்த ஒரு நியாயமான காரணமும் கிடையாது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.07 12:33:04 +0530

எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>

3. மனுதாரர்களால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்/வாதி இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் கேட்கப்பட்டது.

**(5.1) மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்** மேற்படி நிறைவேற்று மனுவில் எதிர்உரை தாக்கல் செய்ய கடந்த 10–12–2019 அன்று கெடு போடப்பட்டு, எதிர்உரை தாக்கல் செய்யாத காரணத்தால் மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவானது பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த விபரமானது கடந்த 14–12–2021 அன்று தான் சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் மூலம் மனுதாரர்களுக்கு தெரியவந்துள்ளது என்றும், இம்மனுவினை கடந்த 10–12–2019–லிருந்து 30 நாட்களுக்குள் தாக்கல் செய்து இருக்க வேண்டும் என்றும், ஆனால் இந்நிறைவேற்று மனு குறித்த விபரமானது கடந்த 14–12–2021 அன்று தான் மனுதாரர்களுக்கு தெரியவந்தது என்றும், போதிய சட்ட ஆலோசனை கிடைக்காததால் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் இம்மனுவினை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், எனவே இம்மனுவினை தாக்கல் செய்வதில் ஏற்பட்டுள்ள காலதாமத நாட்களான 705 நாட்களை மன்னித்து, இத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் நிறைவேற்று மனுவிற்கான எதிருரையை ஏற்றுக்கொண்டு வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

**(5.2) எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர்** நிறைவேற்று மனுவில் மொத்தம் 16 எதிர்மனுதாரர்கள் உள்ளனர் என்றும், இவர்களில் யாராவது ஒருவர்கூட வழக்கில் ஆஜராகி நடத்தியிருக்கலாம்

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.07 12:33:10 +0530

என்றும், இந்த நிறைவேற்று மனுவில் ஒருதலைபட்ச உத்தரவு தீடீரென்று ஏற்படவில்லை என்றும், மனுதாரர்களுக்கு பலமுறை வாய்ப்பு வழங்கப்பட்டு அதன் பின்னரே உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியான 10.12.2019 அன்று மனுதாரர்களின் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தார் என்றும், எனவே போதிய சட்ட ஆலோசனை கிடைக்கவில்லை என்ற கூற்று பொய்யானது என்றும், நிறைவேற்று மனுவில் ஏற்பட்ட உத்தரவு விபரம் 14-12-2021 அன்று தான் மனுதாரர்களுக்கு தெரியவந்தது என்பது அப்பட்டமான கட்டுக்கதை என்றும், 705 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க எந்த ஒரு நியாயமான காரணமும் இல்லை என்றும், எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

<u>6. தீர்வு:</u>

**இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது.**

**(6.1)** மேற்படி நிறைவேற்று மனுவில் கடந்த 10.12.2019 அன்று மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்ய வேண்டி உ.வி.மு.ச.கட்டளை 21, விதி 106(3)-ன் கீழ் 30 நாட்களுக்குள் மனு தாக்கல் செய்திருக்க வேண்டும். ஆனால் மனுதாரர்கள் தரப்பில் அவ்வாறு தாக்கல் செய்யாமல் 705 நாட்கள் காலதாமதமாக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவிற்காக மனுதாரர் கூறியுள்ள காரணங்கள் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளும் படியாக இல்லை. மனுதாரர்கள் தரப்பில் காலதாமதமான ஒவ்வொரு நாட்களுக்கும் சரியான ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணம் எதுவும் மனுவில் கூறப்படவில்லை.

**(6.2)** மேலும் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கூறப்பட்ட வாதமான ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியான 10.12.2019 அன்று

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.07 12:33:17 +0530

மனுதாரர்களின் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தார் என்றும், எனவே போதிய சட்ட ஆலோசனையானது மனுதாரர்களுக்கு கிடைக்கப்பெறவில்லை என்ற மனுதாரர்களின் கூற்றானது பொய்யானது என்ற எதிர்மனுதாரர்களின் வாதம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, போதிய சட்ட ஆலோசனை கிடைக்காததால் தான் குறிப்பிட்ட காலக்கெடுவிற்க்குள் இம்மனுவினை தாக்கல் செய்ய முடியவில்லை என்ற மனுதாரர்களின் வாதம் நிராகரிக்கப்படுகிறது.

**(6.3)** மேலும் உ.வி.மு.ச.கட்டளை 21, விதி 106(3) ஆனது ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோரும் விண்ணப்பத்தை 30 நாட்களுக்குள் தாக்கல் செய்திட வேண்டும் என்று கூறுகிறது. ஆனால் இந்த வழக்கில் மனுவானது 30 நாட்கள் கழித்து 705 நாட்கள் கால தாமதத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த மனுவில் போதிய நற்கூறுகள் எதுவும் இல்லாத காரணத்தாலும், உ.வி.மு.ச.கட்டளை 21, விதி 106(3)–ன் கீழ் மனுவினை 30 நாட்களுக்குள் தாக்கல் செய்யாத காரணத்தாலும், இந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதி அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவில், இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் குறிப்பெடுத்து, பின்னர் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின்னர் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 07–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.07 12:33:23 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர்கள் தரப்பு சாட்சி | – இல்லை – |
| மனுதாரர்கள்  தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதார் தரப்பு சாட்சி | – இல்லை – |
| எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.07 12:33:30 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**நேரிய/வரைவு உத்தரவு**
இடைமனு விண்ணப்ப எண். 6/2021–ல்
நிறைவேற்று மனு எண். 25/2019–ல்
அசல் வழக்கு எண். 173/2013
நாள்–07.10.2025.